# தேசிய கல்வி நிறுவகம்
# ஆசிரியர் கல்வித் துறை

## பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கைநெறி 2017/2018

## விண்ணப்பம் கோரல் - (தமிழ் மொழி மூலம்)

தேசிய கல்வி நிறுவகம் மூலம் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறிக்காக **2017/2018** கல்வி ஆண்டிற்கு தமிழ் மொழி மூல பயிலுனர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**1.0 தகைமைகள்**

**(i)** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொண்ட பட்டத்துடன்,

**(ii)** அரச அல்லது அரச உதவி பெறும் பாடசாலையொன்றில் / பிரிவேனா / அரச அனுமதி பெற்ற மதக் கல்வி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் அதிபராக (இ.அ.சே.) / ஆசிரியராக (இ.ஆ.சே) அல்லது ஆசிரிய ஆலோசகராக

இலங்கை ஆசிரிய கல்வியலாளர் சேவை / இலங்கை கல்வி நிருவாக சேவையில் அதிகாரியாக / தேசிய கல்வி நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கல்விசார் அங்கத்தவராக நிரந்தரமாகவும் தொடர்ச்சியாகவும் சேவையில் இருத்தல்

**அத்துடன்**

2017.03.31 அன்று 52 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்

**2.0** இக் கற்கைநெறியானது வார இறுதி மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் நடத்தப்படும் பகுதி நேர 18 மாத கற்கை நெறியாகும்.

**3.0 கற்கைநெறி நடத்தப்படும் பிரதேச நிலையங்கள்**

| இல. | பிரதேச நிலையம் |
|---|---|
| 01 | கொழும்பு |
| 02 | கண்டி |
| 03 | அட்டாளைச்சேனை |
| 04 | திருகோணமலை |
| 05 | வவுனியா |
| 06 | மட்டக்களப்பு |
| 07 | யாழ்ப்பாணம் |
| 08 | கொட்டகலை |
| 09 | கிளிநொச்சி |
| 10 | முல்லைத்தீவு |
| 11 | புத்தளம் |

**4.0** ஆகக் குறைந்தது ஐம்பது பயிலுனர்களைக் கொண்டிராத நிலையங்களில் கற்கைநெறி நடத்தப்படமாட்டாது. இவர்களுக்கு தமது இரண்டாவது விருப்பு அடிப்படையில் நிலையம் ஒன்றினைத் தெரிவு செய்யச் சந்தர்ப்பம் வழங்கப்படும். விண்ணப்பதாரியினால் விருப்பு அடிப்படையிற் தெரிவு செய்த பிரதேச நிலையங்களினை எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. (இது தொடர்பான இறுதித் தீர்மானம் பணிப்பாளர் நாயகம் அவர்களுடையதாகும்)

**5.0 கற்கைநெறிக் கட்டணம்**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000/= அறவிடப்படும். கற்கைநெறிக் கட்டணம் ரூபா 60000/= ஆகும். கற்கை நெறிக் கட்டணத்தினை இரு தவணைகளில் செலுத்த முடியும். (முதலாம் தவணைக் கட்டணமாக ரூபா 40000/= செலுத்த வேண்டும்) பதிவுக் கட்டணம் ரூபா 1500/= மும் உரிய பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும். கற்கைநெறிக்குப் பதிவு செய்யும் போது பதிவுக் கட்டணமும் முதலாம் தவணைக் கட்டணமும் (ரூபா 41500/=) செலுத்தப்பட வேண்டும்.

**6.0 தெரிவு செய்தல்**

விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமாக கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். **நேர்முகப் பரீட்சையின் போது சேவைக் காலத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**7.0 விண்ணப்பிக்கும் முறை**

(அ) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்தினை A4 தாளில் தனிப்பக்கத்தில் தயாரித்து, பூரணப்படுத்தி இலங்கை வங்கியில் உள்ள **பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 607628** க்கு இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் (மூலப் பிரதி), சுய விலாசமிட்டு ரூபா 15/= முத்திரை ஒட்டப்பட்ட 9″X 4″ அளவுடைய தபால் உறையினையும் இணைத்து **2017.03.31** ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **கற்கைநெறி இணைப்பாளர், பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி, ஆசிரியர் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். காசோலைகள், காசுக் கட்டளைகள் மற்றும் இலங்கை வங்கி அல்லாத வேறு வங்கிகளில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) **2017.03.31** ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களும், முறையாகப் பூரணப்படுத்தப்படாத மற்றும் உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

**8.0** தெரிவு செய்யப்படும் பயிலுனர்கள் 14 வாரங்கள் செய்முறைக் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவார்கள். கற்பித்தலில் ஈடுபடாத கல்விச் சேவையில் உள்ள கல்விசார் அதிகாரிகள் இதன் பொருட்டுப் பொருத்தமான பாடசாலை ஒன்றினைத் தெரிவு செய்யும் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது.

**9.0** தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'PGDE 2017 / T'** எனக் குறிப்பிடவும்.

விண்ணப்பப் படிவங்களை www.nie.lk என்ற இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்ய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் பிற்பகல் 01.00 மணி முதல் 03.00 மணி வரை **0117-601745** என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பெறலாம்.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

Office Use only:

## The National Institute of Education
## Maharagama

# Application for the enrolment in Postgraduate Diploma in Education programme -2017/2018

**(Please complete in ENGLISH CAPITAL LETTERS only)**

| | | |
|---|---|---|
| 1 | **Preferred Centre** | 1. ________ 2 ________ |
| 2 | **Preferred Medium** | |
| 3 | **NIC Number** | |
| 4 | **Date of Birth** | D D M M Y Y Y Y |
| 5 | **First Name** | Rev./ Mr./ Ms. |
| 6 | **Names Denoted by Initials** | |
| 7 | **Address (Residence)** | |
| 8 | **Post code** | |
| 9 | **Address (Work)** | |
| 10 | **Designation** | |
| 11 | **Title of the degree** | |
| | **University / Institution** | |
| 12 | **Date of first appointment** | D D M M Y Y Y Y |
| 13 | **Contact Phone No.** | |

I declare that the information given above is true and correct. I further state that the receipt for the fees for the application processing is attached.

…………………………..

Signature of the candidate Date:……………………

**Recommendation of the Principal**

I recommend the application of Rev/ Mr/ Ms. …………………………………

Signature :………………… Date:…………………… (Official stamp)

**Recommendation of the Director of Zonal Education Office**

I recommend and forward the application of Rev/ Mr/ Ms. …………………………………

Signature :………………… Date:…………………… (Official stamp)